# ஸ்ரீ அகத்தியர் ஆரத்தி பாடல்



சித்தர் நாயகன் தமிழ் பித்தன் சேவகன்
சக்தி தாயவள் ப்ரியபக்தபாலகன்
அத்தி மாமுகன் வினை தீர்த்தமானவன்
தீர்த்தமாமலை திவ்ய ஆர்த்தி மங்களன்
குருவடி சரணம் அகஸ்தியர் திருவடி சரணம்-2

கர்மத்தின் பலன் என்கனவில் சொன்னவன்
புண்யமாய் நிலம் இங்கு தானம் கொண்டவன்
என்னுடன் இரு எனச் சொன்ன மன்னவன்
உன்னை கைவிடேன் என்று என்னில் நின்றவன்
(குருவடி)-2

தொலைந்த ஆவினம் அதை மீட்டு வருபவன்
தோஷம் நீக்கவே வழி காட்டி தருபவன்
குழந்தை வேண்டுவோர் மனை மழலையானவன்
குழந்தை வேலவன் உபதேசமானவன்

(குருவடி) -2

ஆனமாமலை அடி அடக்கி ஆண்டவன்
வானமாமலை பதிவாழும் வாமணன்
ஊனமானுடம் உணவூட்டும் தாயவன்
தானுமாலயன் தந்த பொதிகை நாயகன்

(குருவடி) -2

உச்சி வேளையில் உரையாடும் அச்சுதன்
சச்சிதானந்தம் ஆன சண்முகன் சிவன்
சித்தர்கள் கணம் புடை சூழ வந்தவன்
பக்தர்கள் மனம் உரை மாயபக்குவன்

(குருவடி) -2

பச்சை முண்டுடன் திகழ் பத்மபூஷணன்
இச்சையின்படி வரம் நல்கும் ஈஸ்வரன்
சப்தமண்டலம் தொழும் ஸ்வஸ்திவாச்சகன்
சயன ஈஸ்வரன் தீர்த்த மலையில் வாழ்பவன்

(குருவடி) -2

உப்புதேகத்தை காயகற்பம் செய்பவன்
ஒப்பில்லாததோர் தூய வாழ்வு தருபவன்
அற்புதங்களாம் அருள் ஆற்றல் உள்ளவன்
பொற்பதம் தொழும் அடியார்க்கு நல்லவன்
(குருவடி) -2

அருணன் சந்திரன் அவன் அக்னி நேத்திரம்
அன்பர் அனைவரும் அகஸ்த்ய கோத்திரம்
வருண பாலகன் கொடை வைத்ய சாஸ்திரம்
வாழ்க வாழ்கவே அகஸ்தியர் வாழும் ஆஸ்ரமம்
(குருவடி) -2

ஓம்அகத்தீசாய நமோ நம